सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்
# யாழ்ப்பாணம்

## <u>ஊடக குறிப்பு</u>

## தெய்வீக சுகானுபவம் - II – 2013

இந்திய இலங்கை அறக்கட்டளை அமையத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகமும் வடமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தெய்வீக சுகானுபவம் - II – 2013 நிகழ்வை நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவகாலத்தின் சமகாலத்தில் நிகழும்படி செப்ரெம்பர் 4ஆம் முதல் 6ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்கின்றன. இவ்விழாவின் திட்டமிடல், தயார்படுத்தல் மற்றும் நடைமுறைபப்படுத்தலில் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். கலைஞர்களுடனான தொடர்பை மாணவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதும் கற்றலுக்கான சூழலை வழங்குவதற்குமான களத்தை அமைத்துக் கொடுப்பதுடன் நுண்கலைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு தமது துறைசார்ந்த எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கான ஊக்கத்தை பிரபலமான கலைஞர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பதும் இந்நிகழ்வின் நோக்கமாகும்.

இவ்வருடம் தெய்வீக சுகானுபவம் II ஆனது யாழ்ப்பாணத்தில் 2013 செப்ரெம்பர் 4,5,6 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டடுள்ளது. புகழ்பெற்ற கர்நாடக சங்கீத இசைக்கலைஞர் ஶ்ரீமதி. சுதா ரகுநாதன், பரதநாட்டிய கலைஞர் ஶ்ரீமதி. லீலா சாம்ஸன் மற்றும் கர்நாடக சங்கீத கலைஞர் ஶ்ரீ T. M. கிருஷ்ணா மற்றும் அரித்வாரமங்கலம் ஏ.கே.பழனிவேல் - தவில் வித்வான்- ஆகியோர் இந்திய இசை நடன நிகழ்வுகளையும் பயிலரங்குகளையும் யாழ்ப்பாண மாணவர்களுக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கும் நடத்தவுள்ளனர். ஒவ்வொரு பயிலரங்கிலும் யாழ்ப்பாணப் பாடசாலைகளிலிருந்து மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றுவர். கலாச்சார நிகழ்வுகளும் பயிலரங்குகளும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும். இவ்வருடமும் மூன்று நாள் நிகழ்வுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த சென்னை சுவானுபவா அமைப்பு தேவையான வழிகாட்டலையும் அனுசரணையையும் வழங்குகிறது.

# நிகழ்ச்சி நிரல்

**புதன்கிழமை, 4 செப்ரெம்பர் 2013**

**11.30 மு.ப.** பயிலரங்கு : நிகழ்த்துபவர், ஸ்ரீமதி. லீலா சாம்ஸன்
**இடம் : வீரசிங்கம் மண்டபம்**

**06.30 பி.ப** ஸ்ரீமதி. லீலா சாம்ஸன் அவர்களின் பரதநாட்டிய ஆற்றுகை,
**இடம் : சங்கிலியன் தோப்பு, நல்லூர்**

**பிரதம விருந்தினர்- மேன்மை தங்கிய. திரு. வை.கே. சின்ஹா**
**(இலங்கைக்கான இந்தியத் தூதுவர்)**

**வியாழன், 5 செப்ரெம்பர் 2013**

**09.30மு.ப.** பயிலரங்கு : நிகழ்த்துபவர், கர்நாடக சங்கீத இசைக்கலைஞர் ஸ்ரீமதி.சுதா ரகுநாதன்
**இடம் : வீரசிங்கம் மண்டபம்**

ஸ்ரீ பி.ராகவேந்திர ராவ் - வயலின்
பத்ரி ஸ்ரீ சதீஷ்குமார் - மிருதங்கம்
ஸ்ரீ பி.எஸ் புருஷோத்தம் - கஞ்சிரா
முனைவர்- எஸ். கார்த்திக் - கடம்

**06.30 பி.ப.** ஸ்ரீமதி. சுதா ரகுநாதன் அவர்களின் கர்நாடக இசைக்கச்சேரி
**இடம் : சங்கிலியன் தோப்பு, நல்லூர்**
**பிரதம விருந்தினர்- கௌரவ ஜி.ஏ. சந்திரசிறி**
**(ஆளுனர், வடக்கு மாகாணம்)**

**வெள்ளிக்கிழமை, 6, செப்ரெம்பர் 2013**

09.30 மு.ப. தாளவாத்தியக் கச்சேரியும் பயிலரங்கும்
**இடம் : வீரசிங்கம் மண்டபம்**

அரித்வாரமங்கலம் ஸ்ரீ ஏ.கே.பழனிவேல் - தவில்
பத்ரி ஸ்ரீ சதீஷ்குமார் - மிருதங்கம்
ஸ்ரீ பி.எஸ் புருஷோத்தம் - கஞ்சிரா
முனைவர்- எஸ். கார்த்திக் - கடம்

**கர்நாடக சங்கீத கலைஞர் ஸ்ரீ T. M. கிருஷ்ணா அவர்களின் இசைக்கச்சேரி**

கச்சேரி மற்றும் பயிலரங்குக்கான அனுமதி இலவசம், இவற்றில் பங்குபற்ற இந்திய சாஸ்திரிய சங்கீத மற்றும் நடன இரசிகர்கள் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.